# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித் தாளாகப் பதிவு பெற்றது)


**ஆசிரியைகளின் வருடாந்த ஞான ஒடுக்கம்**

யாழ். மாவட்ட கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த ஞானஒடுக்கம் புரட்டாசிமாதம் 3-ந் தேதி சாயந்தரம் 5மணிக்கு ஆரம்பமாகி 5-ந்தேதி சாயந்தரம் 6மணிக்கு முடிவுபெறும். பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறும், போதகராக வண. பிதா இம்மனுவேல் யேசுதாசன் கடமையாற்றுவார்.

பங்குபற்றுவோர் நேரகாலத்தோடு சமுகந்தரும்படி கேட்கப்படுகிறார்கள்.

சுவாமி ஜ். சி. பாலசுந்தரம்,
யாழ். மாவட்ட மறைக்கல்வி ஆலோசகர்.


96-ம் புத். | 1971-ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 31-ம் இல


# வட அயர்லாந்தில் கவலைக்குரிய நிலைமை

வடஅயர்லாந்தில் புரொட்டஸ்தாந்து சமயத்தினர் பெரும்பாலனராக வாழ்ந்து வரும் அல்ஸ்ரர் பிரிவு இங்கிலாந்தின் ஆட்சியின்கீழ் இருந்து வருகின்றது. அங்கே சிறுபான்மையினராக வசித்துவரும் கத்தோலிக்கர் வேலைவசதிகள் பெறுவதிலும், வசிப்பதற்கு வீடுவசதிகள் பெறுவதிலும், மற பொருளாதார உரிமைகள் அனுபவிப்பதிலும் பெரும் அநீதிகள் நடைபெறுவதால் சென்ற பல வருடங்களாக இரு சமூகத்தினருக்குமிடையில் மனக்கசப்பும், கைகலப்பும், கொலைகளும் நடைபெற்று வருகின்றது. நிலைமையைக் கட்டுப்படுத்த ஆங்கில அரசாங்கம் துருப்புக்களைப் பெருமளவாக அங்கு அனுப்பிய பொழுதிலும் நிலைமை மோசமாகியே வருகின்றது. சென்ற இருவாரங்களில் நிலைமை கட்டுக்கடங்காத்தன்மை அடைந்துவிட்டது. அரசாங்கம் விளக்கமின்றித் தடையும் மறியலும் இட்டுவருகின்றது. ஒரு குருவானவர் காயப்பட்ட ஒருவருக்கு அந்திய தேவதிரவிய அனுமானம் கொடுக்கும் பொழுதே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார். இவ்வாறு நிலைமை அங்கு மோசமாகி வருவது பெரும் கவலைக்கிடமாக இருக்கின்றது.

# திருச்சபை எப்போதும் மௌனம்சாதிக்க முடியாது

பிரான்சுதேசத்தில் அண்மையில் நடைபெற்று முடிந்த அத்தேசக் கத்தோலிக்கரது 57ஆவது வருடாந்த சமூக வார வைபவத்தில் சொற்பொழிவாற்றிய வணக்கத்துக்குரிய கொஸ்ராவ் சுவாமியார் தேசத்தில் என்ன நடந்த பொழுதிலும் திருச்சபை மௌனமாயிருக்க வேண்டுமென்று கூறுபவரின் பேதமையை விளக்கியருளினர். பொருளாதார, சமூக, அரசியல் அநீதிகள் தேசத்தில் நடக்கும்போதெல்லாம் அந்த அநீதிகளை எடுத்துக்காட்ட வேண்டியது திருச்சபையின் கடமையென்றும அரசாங்கத்தோடு சமாதானமாய், ஒற்றுமையாய், இருப்பதால் வரும் நன்மைகளைக் கருதி, அநீதிகளைக் கண்டியாது விடுதல் கிறீஸ்துநாதரைச் சத்துராதிகளுக்குக் காட்டிக் கொடுக்கும் துரோகமெனவும் கூறினர். திருச்சபை தன் கடமையைச் செய்து தேசத்தில் நடக்கும் அநீதிகளைச் சுட்டிக் காட்டுவதனுல் உலகிற் சில பாகங்களிலும் உபத்திரவப் படுத்தப்படுவதில் வியப்பு அடையக்காரணம் எதுவும் இல்லை என்றுர் கொஸ்ராவ் அடிகளார்.

## வத்திக்கான் மறுக்கின்றது

அகில உலகத்திலுள்ள தர்மஸ்தாபனங்கள் யாவும் பிறிதுபிறிதாக தர்மத்துக்கென வருடந்தோறும் சேர்க்கும் பணத்தை முழுவதும் கொண்டு நடத்தும் பொறுப்பைக் கைக்கொள்ளவே வத்திக்கான் தர்மஸ்தாபன பணநிதியின் மத்திய கட்டுப்பாட்டை நிறுவியதெனப் பரவி வரும் அபிப்பிராயத்தில் சற்றேனும் உண்மையில்லையென வத்திக்கான் மறுத்துக் கூறியிருக்கின்றது. இப்பணத்தை வத்திக்கான் தன் கட்டுப்பாட்டுக்குட் கொண்டு வந்து தனது கொள்கைகளுக்கு இசைந்தபடி தர்மப்பணமாக பகிர்ந்துகொடுப்பதே வத்திக்கானின் நோக்கமெனக் கொள்வது முற்றிலும் பிழையாகும். புதிய கட்டுப்பாட்டின் ஒரே நோக்கம் யாதெனில் ஒரே வேலையைப் பலர் புரியாது, முயற்சியைப் பிரித்துக் கொள்வதே யாகும். புதிய முறையினால் தர்மநிதியின் மேல் வத்திக்கானுக்கு அதிகாரம் இருக்கமாட்டாது.

## கருதினல் கலோறி காலமானர்

முறையே திருச்சபையை ஆண்டுவந்த 12-ம் பத்திநாதர், 23-ம் அருளப்பர், 6-வது சின்னப்பர் ஆகிய மூன்று பாப்புமாரின் ஆட்சிகளில் வத்திக்கான் இல்லத்தில் அவர்களுக்குத் துணையாளராகத் தொண்டு செய்துவந்த கருதினல் பெடெறிக்கோ கலோறி அடிகளார் அண்மையில் ரோமாபுரியில் தமது 80-ம் பராயத்தில் காலமானர். குருவாக 1917ஆம் ஆண்டு அபிஷேகம் செய்யப்பட்ட இவர் 1965ஆம் ஆண்டு மேற்றிராணியார் பதவி அளிக்கப்பட்ட அடுத்த தினத்திலேயே கருதினலாக உயர்த்தப்பட்டார். அநேக வருடகாலம் வத்திக்கானில் குருமார் சந்நியாசிகள் விவகார காரியாலய அதிபர்களில் ஒருவராகக் கடமையாற்றி வந்தவர். இவர் மரணத்தினுல் கருதினல்மார்தொகை இன்று 121ஆகிவிட்டது.

## குடும்பமாகச் செபிக்கும் வழக்கம் குன்றி வருவதைத் தடுக்க வேண்டும்

எமது நாட்டில் கத்தோலிக்க குடும்பங்கள் ஒவ்வொரு நாளும் செபித்துவந்த வழக்கம் குன்றிவருகின்றதென்பது மறுக்கமுடியாதிருக்கின்றது. காலையில் குடும்பமாகத் திருப்பலி காணத் தவறிய குடும்பங்கள் அக்காலத்தில் மிகச்சிலவே. பொழுதுபடும் நேரத்தில் செபமாலை ஓதப்படும் ஓசை ஒவ்வொரு இல்லத்திலும் கேட்கப்பட்டது அக்காலத்தில். ஆனல், இன்றோ இப்பக்திகள் குன்றிவருகின்றன. மேலும் குன்றுது தடுத்துவைக்க வேண்டிய கடமை பிரதானமாகப் பெற்றோரினதே. தேவனைத் தேடாத குடும்பங்கள் ஒருபோதும் சந்தோஷமாய் அநேககாலம் வாழ்ந்ததில்லை. ஆகவே, குடும்பமாகத் திருப்பலிகாண்பதிலும், செபமாலை ஓதுவதிலும், காலை மாலைச் செபங்கள் சொல்வதிலும் கத்தோலிக்க பெற்றோர் தமது பிள்ளைகளின் நன்மையை விரும்புவார்களாயின் தமது கவனத்தைச் செலுத்துவார்களாக.

## கொழும்பு புதிய அட்சகர் ஆர்ச் டீக்கன் அபநாயக அடிகள்

அங்கிளிக்கன் கிறிஸ்தவ சபை கொழும்பு அதிமேற்றிராணியாராக பலவருடங்கள் திறமையுடன் தொண்டாற்றிச் சென்றஆண்டுகாலமான ஹரல்டி சொய்சா அடிகளாரின் இடத்தில் புதிய அட்சகராகக் கடமைபுரிய சிறில் லின்டன் அபநாயக அடிகளார் கொழும்பு அங்கிளிக்கன் மேற்றிராசனசபையினரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறர். புதிய அட்சகராகத் தெரிவு செய்யப்படுமுன் அபநாயக அடிகளார் கொழும்பு ஆர்ச் டீக்கனுகவும் மேற்றிராசன பரிபாலகராகவும் தொண்டாற்றி வந்தவர். அபநாயக அடிகளார் மறைநூற் கல்வியிலும் கலைப்பாடங்களிலும் ஆங்கிலநாட்டுச் சர்வகலாசாலைகளிற் பாண்டித்தியம் பெற்றவர். கொழும்பு மாவட்டத்திலுள்ள சமயப் பிரசங்கிகளுள் தலைசிறந்தவர். அண்மையில் அவுஸ்திரேலியா தேசத்தில் பலமாதங்களாக விசேஷ பிரசங்கங்கள் செய்ய அழைக்கப்பட்டவர்.

## மௌனம் காத்த கன்னியாஸ்திரி சிறையிலிடப் பட்டாள்

ஒரு கொலை வழக்கு விசாரணையின்போது தனக்குத் தெரிந்ததை மனச்சாட்சி காரணமாக நீதிபதிக்கு வெளிவிடமறுத்த ஒருகன்னியாஸ்திரி அவ்விரகசியத்தை வெளியிடும் வரையும் சிறைத்தண்டனை அனுபவிக்க அண்மையில் ஐக்கிய அமெரிக்க தேச நியூஜேர்சி நகரில் அந் நீதிபதியினுல் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார். கன்னியாஸ்திரியார் நீதிமன்றத்தை அவமரியாதை செய்தார் என்னும் குற்றத்துக்கு ஆளானர். ஆனல், அவரோ தனது திருத்தொண்டின்போது அறியவந்த இரகசியத்தை வெளிவிடுவது தனது மனச்சாட்சிக்கு எதிரெனக்கருதிக் கொண்டார்.

## மனந்திரும்பிய பாதிரிமார்

புரொட்டஸ்தாந்த பாதிரிமாரும், கன்னியாஸ்திரிகளுமாக மனந்திரும்பிக் கத்தோலிக்க மறையில் சேருவார் தொகை பெரிதாகிக்கொண்டு வருவதாக லண்டன் நகரிலே இவ்விதம் மனந்திரும்புவாருக்கு உதவி செய்து வரும் சபை அறிக்கையிடுகின்றது. இந்தியாவிலே கேர்னல் எனுமிடத்தில் ஒரு தொகையான அங்கிளிக்கன் சபைப் பாதிரிமாரும், அவர்களின் விசாரணையில் இருந்துவந்த கிறீஸ்தவர்களும் திருச்சபையில் சேர்ந்திருப்பதாகவும், அவர்களில் ஐவர் குருத்துவத்திற்குப் படிக்கச் சபை உதவி செய்வதாகவும் அதன் வருடாந்த அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஓய்வுநேரத்தை இல்லத்தில் செலவுசெய்க

ஹங்கேரிதேச சமூகவியல் விற்பன்னர் ஒருவர் பதினெரு தேசங்களில் 30,000 ஆட்களின் சீவியத்தை பரிசீலனை செய்ததன்பின், குடும்பவாழ்க்கையில் பிளவுகள் பிரிவினைகள் ஏற்படாதிருக்க வழி தம்பதிகள் தமது ஓய்வு நேரங்களின் பெரும் பகுதியைத் தம் இல்லங்களிலே செலவு செய்தலே எனும் முடிவுக்கு வந்திருக்கிறர். ஓய்வு நேரங்களை தம் இல்லத்துக்கு வெளியே உல்லாசங்களில் செலவு செய்பவர்களின் இல்வாழ்க்கையில் சீர்கேடுகள் ஏற்படுவது இயற்கையே என அவர் எடுத்துக் காட்டுகின்றர். இதனுல் ஓய்வு நேரம் முழுவதையும் வீட்டிலேயே செலவு செய்ய வேண்டுமென்பது அவர் கருத்தன்று. அநாவசியமாய் இல்லத்துக்கு வெளியே உல்லாசத்தைத் தேடுவது கேடு என்பதே அவர் கூற்று.

**" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்**

# முதல் வெற்றி எவருக்கு?

"அதுதான் கப்பல்," "அது தான் கப்பல்" இவ்வாறு!

அந்த நீராவிக்கப்பல் புவனேஸ் எயேர்ஸ் துறைமுகத்தில் பிரவேசித்தபோது, லூயிஸ் லான்சா, போல் லான்சா எனும் சகோதரர் இருவரும் ஒரே கோஷமாய் மகிழ்ச்சிக்குரல் எழுப்பினர்.

அந்நாளிலே தென்னமெரிக்காக் கண்டமானது எவருமே இலகுவில் பணஞ் சம்பாதிக்கக்கூடிய அத்துணை பெரும் செழிப்புற்றிருந்தது. அதன் பல்வேறு நாடுகளுங் பொன்வெள்ளிச் சுரங்கங்களும், பிறவளங்களும் தேங்கியனவாய், "திரைகடலோடியும் திரவியம் தேடு" எனும் முதுமொழிக்கிணங்கப் பொருள்தேட முயன்றோர்க்கெல்லாம் பொற் களஞ்சியம் போல் திகழ்ந்தது. அதனால் ஐரோப்பாவின் பலநாடுகளிலுமிருந்து பெருந்திரளானமக்கள் அங்கு சென்றார்கள்.

இவர்களிலே நிரந்தரமாகப் போய்க் குடியேறித் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்த எண்ணியவர்களும பிறருமாக லட்சக்கணக்கானோர் ஆங்கு சென்றார்கள். இவர்களைத் தவிர, மானிடரை இறைமக்கள் ஆக்குவதையே தங்கள் புனித லட்சியமாகக் கொண்டு சலேசியன்சபைக் குருமார் பலரும் அங்கு செல்லலாயினர்.

அப்பொழுது லூயிஸ், போல் என்ற முன்சொன்ன இரு சகோதரரும் இத்தாலியிலிருந்து அதே கண்டத்தின் தென்பாலுள்ள ஆர்ஜென்ரீனா நாடு சென்று அங்கு தானே குடியேறினர். புவனேஸ் எயேர்ஸ் என்பதே அதன் தலைநகர். இருவரும் அங்கு போய்க் குடியேறிய பின்னர் இறைவன் அருளாலும், சுய பிரயாசையாலும் அவர்கள் தொட்டதெல்லாம் பொன்னு, கைபட்டதெல்லாம் கருத்தனமாக, அதனால் சிலவருட காலத்திலே பெருந்தொகைப் பணம் ஈட்டித் தங்களுக்கென அழகான ஒரு மனையைச் சொந்தமாக அமைத்துக் கொண்டனர். பின்னர் அவர்களுக்கு வேண்டியிருந்ததெல்லாம் அதனைப் பார்த்துமேய்த்துப் பராமரிப்பவர் மட்டுமே. ஆகவே, இருவரும் சேர்ந்து தங்களுக்கு வாழ்க்கைத் துணைவியாக இருவனிதையரை அனுப்பிவைக்குமாறு இத்தாலியிலுள்ள தங்கள் இனசனருக்கே கடிதம் போக்கிவிட்டுப் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், வாரங்கள் பலகடந்து, மாதங்கள் பல கழிந்து வருடமும் ஒன்றாக்கு மேலாகியும் பதிலேயில்லை. இருவரும் அதனை நெடுநாள் வழிபார்த்துக் கண் பூர்த்துப் போய் இருந்துவரும் காலத்தில் அவர்கள் கொண்ட கருத்திலே ஒரு பெரும் திருப்பம் ஏற்பட்டது. அதாவது, அவர்களின் எதிர்கால வாழ்க்கைப் பாதை எதிர்ப்புறமாகத திசை மாறியது. அவ்வாறாக ஒரு நாள் எதிர்பாராதவிதமாக அவர்களின் உறவினரிடமிருந்து அவர்களுக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதிலே "நீங்கள் ஆசித்தபடியே இளம் பெண்கள் இருவரை அனுப்பி வைக்கின்றோம் அவர்கள் வரும் கப்பல் ஆவணி மாதம் 16ஆம் திகதி புவனேஸ் எயேர்ஸ் துறைமுகம் வந்துசேரும். அன்பாக அவர்களை வரவேற்று..." என்று வரைந்திருந்தது. அதனைப் படித்ததே சிம்ம சொற்பனம் கண்டவர்கள்போல் இருவரும் திகைத்தனர், உள்ளம் மலைத்தனர், அங்கலாய்த்தனர். இருவருக்குமே ஒருவருக்கொருவர் புரியாத ஒரு புதிர் அது. அதுமுதல் அவர்களின் சிந்தனைக் கடலிலே பெரும் புயல்வீசி அலைமோதத் தொடங்கியது. ஆமாம், வாழ்க்கையில் ஏற்படும் திருப்பம் எவரையும் ஆட்டிப் படைக்கத்தான் செய்கிறது. நிற்க,

— "ஞானம்" —

கப்பல் வந்துசேரும் நாள் வரவே இருவரும் துறைமுகஞ் சென்றனர். பிரயாணிகள் ஒருவர்பின் ஒருவராய்க் கப்பலை விட்டிறங்கிக் கரைசேர்ந்த போது அவர்கள் ஒவ்வொருவரையும் கவனித்தபடியே நின்றனர். கடைசியாகக் கப்பலிலே ஒரு தனிமரம்போல் நிராதரவானநிலையில் தவித்து நின்ற ஓர் இளமங்கை இறங்குதுறையில் அடியெடுத்துவைக்கவே, இருவரும் அவளைப் பார்த்தும் பாராமலே சந்தேகப் பார்வையுடன் அவள் பக்கம் அணுகினர். பார்வைக்கு இரட்டையர்போல் இருப்பரென்று தனக்குச் சொல்லப்பட்ட குறிப்பைக்கொண்டு இருவரையும் அவள் இன்னாரெனப் புரிந்துகொண்டு அவர்களைப்பார்த்து ஒரு புன்னகை உகுத்தாள். தன் கையிலிருந்த கடிதமொன்றை அவர்களிடம் கையளித்தாள். அதைப் படித்ததும் அவர்களும் பதிலுக்குப் புன்முறுவல்செய்து அவளை வரவேற்றனர். பரிவாகத் தங்கள் இல்லத்துக்கு அழைத்துச்சென்றனர். அவளும் அங்கு சென்றதுமுதல் ஏதோ சொல்லிவைத்தாற் போன்று சமயல் முதல் சகல அலுவல்களையும் சந்தோஷமாகச் செய்து அந்த இல்லத் தாசியாகத் தன்னை ஆக்கிக் கொண்டாள்.

ஆனால், அவள் வந்ததுமுதல் சகோதரரிடையே ஒரு பெரும் பிரச்சினை. நாம் "இருவர்; வந்திருப்பவள் ஒரு பெண் மட்டும்; அதனால் அவளுக்கு மாலையிடுவது யார்"என்பதே அப்பிரச்சினை. பரமசங்கடமான இந்நிலையிலே என்செய்வதென்று அறியாது இருவரும் சில தினங்களாகக் கவலையுடன் சிந்தித்திருக்கும் போது, ஒரு நாள் லூயிஸ் தனது சகோதரனை விழித்து, "போல், ஒரேயொரு பெண், இருவர் நாம், ஆனால், மணஞ் செய்ய இப்பொழுது எனக்கு மனமில்லை, ஏனெனில், நான் ஒரு சலேசியன்சபைக் குருவாக வேண்டுமென ஆசிக்கின்றேன். அதனால் நீயே தயவு செய்து அவளைக் கையேற்க வேண்டும்" எனக் கூறினான்; இதைக் கேட்டதே போல் திடுக்காட்டமுற்றவனாய், "அண்ணா, சொல்லுகிறேனென்று குறைநினைக்க வேண்டாம், தங்களைப் போன்று நானுமே ஒரு சலேசியன் சபைக் குருவாகவேண்டுமென ஆசித்துவிட்டேன்; அதனால் மூத்தவராகிய தாங்களே அவளைக் கையேற்கவேண்டும்" என்றான். ஆகவே, இப்பொழுது முந்தியதிலும் பிந்தியது முற்றுமே மோசமான ஒரு பிரச்சினையாயிற்று.

"இரண்டுங்கெட்ட அந்தரமான இந்த நிலையிலே இனிச் செய்யக்கூடியது ஒன்றுதான்; திருவுளச்சீட்டுப் போட்டுத் திருவுளத்தை அறியவேண்டியதுதான்" என்று லூயிஸ் ஆலோசனை கூறவே, இருவரும ஏகமனதாக அதனை ஏற்றுக்கொண்டனர். இருகாகிதச்சீட்டுகள், அவற்றிலே 1, 2 எனும் இலக்கங்கள், இவற்றில் முதலாம் துண்டு எவருக்கு விழுகிறதோ அவர் வெற்றியாளராகக் குருமடஞ்செல்வது. இரண்டாம் துண்டு எவருக்கு விழுகிறதோ அவர் அப்பெண்ணை ஏற்றுத் திருமணஞ் செய்வது. இந்த நிபந்தனைக்கு இருவரும் உடன்பட்டனர். அப்பொழுது சமுகமளிக்குமாறு அப்பெண்ணும் அழைக்கப்பட்டாள், சீட்டுகள் உருட்டப்பட்டன. இருவரும் குனிந்து ஒவ்வொரு சீட்டை எடுத்தனர். சிறிது வேளை எங்கும் அமைதி நிலவியது. அதன்மேல போல் கண்கள் இரண்டும் கலங்க, அவற்றிலிருந்து கண்ணீர்த்துளிகள் பெருக, "அண்ணா, நீங்களே, வெற்றி பெற்றீர்கள; அதனால் குருமடஞ் செல்ல வேண்டியது நீங்கள் தான்; நான் திருமணஞ்செய்ய வேண்டியது தான்" என்று தலைவணங்கித் தனது சம்மதத்தைத் தெரிவித்து மணமகளின் பக்கம் திரும்பிப் புன்னகை தவழ, ஆனந்தக் கண்ணீர் பெருக அவளை வரவேற்றான். லூயிஸ் திருவுளத்தை வியந்துபோற்றி இருவரையும் வாழ்த்தி நின்றான். திருமணமும் நிறைவாயிற்று. லூயிஸ் குருமடஞ் சென்றான்.

காலச்சக்கரம் வழமை போலச் சுழன்றது. காலகதியில் லூயிஸ் ஒரு குருவாயினார். போல்—மேரி கொம்பனூ தம்பதிகளின் வாழ்க்கைப்படகு அசைந்துசென்றது. ஐந்து பெண் குழந்தைகளும், ஓர் ஆண்குழந்தையுமாக ஆறு பிள்ளைப்பாக்கியங்களைக் கொடுத்து அவர்களின் குடும்பத்தை இறைவன் ஆசீர்வதித்தார். அம்மட்டா? அவர்களின் பிள்ளைகள் அறுவருமே திருவருளால் தங்கள் பெரிய தந்தையாரைப்போல துறவற வாழ்க்கையைமேற்கொண்டார்கள். பெண்மக்கள் ஐவரும் கன்னியாஸ்திரிகளாக, மகனோ பீற்றர் சலேசியன்சபையிலேயே ஒரு குருவாயினார் சலேசியன்சபைக் குருமாராய் வர ஆசித்த லூயிஸும், போலுமாகிய இருவரது இறைதொண்டுகளைமட்டுப கதிற்கொண்டு திருவுளச் சீட்டுப் போட்டால் முதல் வெற்றி எவருக்கு?

நீ எப்பொழுதும் கடமை செய்ய ஆயத்தமாயிரு. அப்பொழுதுதான் உனக்கு நல் வாழ்வு பிறக்கும்.

## ஆசிரியர் எம். இறப்பியேற்பிள்ளை சரவணமுத்து அவர்களின் மறைவு

குராவத்தை வாசரும், இளைப்பாறிய ஆசிரியருமான திரு.எம். இறப்பியேற்பிள்ளை அவர்களின் மரணச்செய்தியானது அவரை அறிந்த யாவரையும் திடுக்குறச் செய்து துயரத்திலாழ்த்தியது.

இவர் இளைப்பாறிய ஆசிரியை கத்தரீனம்மாவின் அன்புக் கணவரும், கொழும்பு சிலோன் ஓஷன் லையின்ஸ் ஷிப்பிங் மனேஜர் (shipping manager) ஆர். இ. யோசெவ் குணசிங்கம் அவர்களதும், அனுராதபுரி தொழிற்கந்தோர் (labour office) பிரதம லிகிதர் அன்ரோனி இரத்தினம் அவர்களதும் பிரிய தந்தையும், கொழும்பு நல்லாயன் பெண் பாடசாலை ஆசிரியை மேரி யோசேப்பினதும, ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய ஆசிரியை ரேஸ் மாகிரேற்றினதும் நேசமாமனுமாவர்.

உயர்குல சைவப்பரம்பரையில் உதித்த இப்பெருந்தகை தமது ஒன்பதாவது வயதிலே கத்தோலிக்க சமயத்தைத்தழுவி ஆசிரிய உலகத்திலே தலைசிறந்த பத்திமானும், புத்திமானும், உத்தமனுமாகத் திகழ்ந்ததுமன்றி, கத்தோலிக்க குடும்பங்களுக்கு ஒரு முன்மாதிரிகையுமாக விளங்கினார் என்பதை உலகறியும்.

இவர் கோப்பாய், சுன்னாகம் உடுவில்,பெரியவிளான், சின்னக்கிளியா, மயிலணி, ஏழாலை, பெரிய பிள்ளைச்சி, பொற்கேணி, மிருசுவில் ஆகிய பாடசாலைகளில் கடமையாற்றி நன்மதிப்புப் பெற்றவர்.

இப்பெரியார் தமது 83-வது பராயத்தில் ஆடித்திங்கள் 25-ம் நாள் இருதயநோய் காரணமாக அந்திய தேவதிரவிய அனுமானங்களைப் பெற்று, இறைவன் பதம் இனிதே அடைந்தார்.

மறுநாட்காலை இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக பூசைப்பலி நிறைவேற்றப்பட்டு உற்றார், உறவினர், நேசிதர் புடைசூழ பாடகர்குழாம் துக்கிதப்பாட, அவரது சடலமானது சேமக்காலையில் கவமாய் அமைக்கப்பட்ட கல்லறையில் செபவேண்டுதலுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

"இரக்கமுள்ள யேசுவே! இவருடைய ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்."

கடிதர்: அ. மாசலீன்.

## சின்னப்பர் .....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கும் நற்செய்தியை முற்றாக ஏற்றுக்கொள்வது தான் எமது மரபு. முன்னேற்றத்துக்கு மாற்றம் எவன் எனின், அது கிறிஸ்து பெருமானது போதனை, பலி, பிரசாதங்களை விளங்கி, விரும்பி, எடுத்துப் பலனோடு பாவிப்பதிலே அடங்குமென்க.

பிரிவினை மனப்பான்மை சத்திய விசுவாசத்துக்கு ஒத்துவராது. வாழ விரும்பினால் நாம் பிரதான உண்மைகளைக் கண்முன் வைத்து ஒத்து ஒழுக வேண்டும். கிறிஸ்து மனிதராலே கொல்லப்பட்டார்; கடவுளாலே உயிரோடு எழுப்பப்பட்டார். இதற்குக் கண்கண்டசாட்சிகள் (50-ம் ஆண்டளவில்) ஜனசனர் இருக்கிறார்கள். இது சரித்திரத்தின் மையமான நிகழ்ச்சி மாத்திரமல்ல, எமது நானாக்த சீவியத்தின் உயிர்நாடி; நித்திய வாழ்வின் சத்தியவழி; நமது இலக்கை யடைய இன்றியமையாத மாதிரி. நாங்கள் கிறிஸ்துவைப் போல மரித்தால் அவரைப் போல நாமும உயிர்ப்போம். இது கத்தோலிக்க மக்களின் விசுவாசம். (தொடரும்)

## மறைக்கல்விக் கருத்தரங்கு

நிகழிடம்: கரம்பன், திருக்குடும்ப கன்னியர் பெண் பாடசாலை.
நாள்: 29-8-71 ஞாயிறு.
நேரம்: காலை 8-30 மணி.
நிகழ்ச்சிகள்: (1) திருமறைக் கல்விச்சபை ஸ்தாபகமும் மறை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பித்தலும். (2) ஞாயிறு பலி பூசை. (3) மேல் வகுப்புகளுக்கான மாதிரிப்பாடம். (4) கலைநிகழ்ச்சி. (5) பொதுமேடை; (6) திரைப்படம்.

பங்குபற்றுவோர் நேரதாமதமில்லாமல் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்:

சுவாமி ஜி. ரீ. பாலசுந்தரம்,
மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம், யாழ்நகர்.

✠

## நினைவு கூருவோம்

ஆசிரியர்
திரு. வில்லியம் சைமன் யோசவ் (தம்பாபிள்ளை)
அவர்கள்
அமரத்துவமடைந்த
3-ம் வருட
நினைவு தினம்

தோற்றம்: 15-8-1890 மறைவு: 30-8-1968

"இம்மையில் நேசித்தோம் மறுமையில் மறவோம்"

ஆசைக்கினிய யேசுவே! எங்களுக்கு அன்பைப்பொழிந்து உமது ஆசிரைப்பெற உம்மிடத்தில் அழைத்துக் கொள்ளப்பட்ட இளைப்பாறிய ஆசிரியர் திரு. சைமன் யோசெவ் அவர்களைக் கிருபையாகப் பார்த்தருளும். தேவரீர் இவருக்கு நடுவராயிராமல் இரட்சகராயிரும். நீதியும் அன்பும் இரக்கமும் சுரக்கும் ஊற்றே! கல்வாரிமேட்டிற் சிந்திய உமது விலைமதிக்கப்படாத திருக்குருதியால் மீட்கப்பட்ட ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும். ஊழியுள்ள காலம் உமது பிரகாசத்தின் ஒளி இவருக்குப் பிரகாசிக்கக் கடவது.

இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக நிகழும் ஆவணிமாதம் 30-ந்தேதி (30-8-71) திங்கட்கிழமை குராவத்தை புனித தெரேசாவின் ஆலயத்தில் காலை 7மணியளவில் திவ்விய பலிபூசை நிறைவேற்றப்படும். அவ்வமயம் அன்னாரின் இனசனர், நேசிதர் யாவரும் பலிபூசையிற் பங்குகொண்டு மன்றாடும்படியும் சமுகமளிக்க முடியாதவர்கள் அவருக்காக வேண்டிக்கொள்ளும் படியும் வேண்டுகின்றோம்.

அன்னவரை இழந்து துயருறும்
அன்பு மனைவி:
திருமதி கிறீஸ்தினு
மக்கள்: திரு. மரியதாசன் விஜயசிங்கம், திருமதி திரேசா சிவப்பிரகாசம், திரு. பேரின்பம் சின்னத்துரை, திருமதி விக்ரோறியா ஞானப்பிரகாசம், திரு. டேவிட் பாலசிங்கம், திருமதி கிறேஸ் யேசுதாசன் அகஸ்ரின், திரு. யேசுதாசன் ஜெயசிங்கம், அருட்திரு நிகபொன்கலன் அலாசிங்கம், மற்றும் மருமக்கள். பேரப்பிள்ளைகள்.
"சாந்தி" இல்லம்,
குராவத்தை, சுன்னாகம்.

# செய்திகள்

## குடும்ப நீதிமன்றம்

குடும்பங்களில் ஏற்படும் தகராறுகளைத் தீர்ப்பதற்கென விரைவிலே குடும்ப நீதிமன்றங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இதற்கான நடவடிக்கையை நீதி அமைச்சு எடுத்து வருகின்றது. குடும்ப தகராறுகள் பகிரங்கமாக விசாரணை செய்யப்படுவதைத் தவிர்க்குமாறே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. குடும்பங்களில் ஏற்படும் பிரிவினைகள், தாபரிப்பு மனுக்கள், வயது குறைந்தவர்களின் திருமணங்கள் ஆதியன இனிமேல் சாதாரண நீதிமன்றங்களில் எடுக்கப்படமாட்டா, குடும்ப நீதிமன்றங்களிலேயே அவைகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## எலிகளால் நேரும் நஷ்டம்

மக்களின் உணவுக்கென்று வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி, பருப்பு, பயறு, மா, மல்லி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களில் வருடம் ஒன்றுக்குப் பத்துலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை எலிகள், கறையான்கள், மற்றும் பூச்சி புழுக்கள் ஆகியன சேதப்படுத்துவதாக அரசாங்கம் கண்டறிந்துள்ளது. பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 75,000தொன் அரிசியைப் பாவனைக்குதவாதவகையிலே அவைகள் நாசமாக்கியிருப்பதாகவும், அத்துடன் உள்நாட்டுத்தானிய வகைகளில் நூற்றுக்கு 25 வீதம் அவைகளால் நாசமாக்கப்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## மன்னாரும் நெல் வேளாண்மையும்

மன்னார் மாவட்டத்திலே நெல் வேளாண்மையை ஊக்கப்படுத்தும் நோக்கமாய் அங்கு 9,000 ஏக்கரிலே புதிய இனநெற்கள் விதைக்கப்படவிருக்கின்றன. இவ்வருட காலபோக வேளாண்மையின்போது அங்கு 4,500 ஏக்கரில் 'ஐ. ஆர். 8'என்ற இன நெல்லும், 4,500ஏக்கரில் மற்றும் உயர்ந்த இன நெல்லினங்களும் விதைக்கப்படும். இதற்கென விவசாயிகளுக்குத் தேவைப்படும் புது இன நெல்விதைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஒழுங்குசெய்யப்படுகிறது.

## மூலிகைவகை ஆராய்ச்சி

இலங்கைக் காடுகளில் வளரும் மூலிகைகள்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கென்று அமெரிக்க மேரிலான்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களின் கோஷ்டி ஒன்று அண்மையிலே இங்கு வரவிருக்கின்றது. ஆராய்ச்சிகள் முடிவடைந்ததும் இலங்கை மூலிகைகள் மூந்த அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்யப்படுமெனத் தெரியவருகிறது. இந்த மூலிகைகளைப் பயன்படுத்தி மேல்நாட்டு வைத்தியத்துக்குத் தேவைப்படும் மருந்துகளை தயாரிக்கமுடியுமெனத் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

## மூன்று எண்ணெய்க் கிணறுகள்

ருஷியநிபுணர்கள் கோஷ்டி செய்த சிபாரிசைத் தொடர்ந்து வடபகுதியில் மூன்று எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்படவிருக்கின்றன. இந்தக்கோஷ்டி தனது ஆராய்ச்சி பற்றிய அறிக்கையைக் கைத்தொழில் — விஞ்ஞான ஆராய்ச்சி மந்திரியிடம் தற்போது சமர்ப்பித்துள்ளது. அதிலே வடபகுதியில் மூன்று எண்ணெய்க் கிணறுகள் தோண்டுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டெனச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அவற்றைத் தோண்டுவதற்கான டென்டர்கள் விரைவிலே கோரப்படுமெனத் தெரியவருகிறது.

## இலவசப் பிரயாணம் இல்லை

மந்திரிமார்களும் மற்றும் எம். பிகளும் இதுகாலவரை அரசாங்க விமானப்படைக்குச் சொந்தமான விமானங்கள், ஹெலிக் கொப்ரர்களிலே தங்கள் உத்தியோக சம்பந்தமாய்ப் பல்வேறு இடங்களுக்கும் இலவசமாகப் பிரயாணஞ் செய்துவந்தார்கள். இனிமேல் இவர்களும் கட்டணங்கள் செலுத்தியே பிரயாணஞ்செய்ய வேண்டுமெனப் பிரதமர் உத்தரவிட்டு, இயன்றமட்டும் புகையிரதங்களிலே பிரயாணஞ்செய்ய வேண்டுமென அவர்களைக் கேட்டிருக்கின்றார்.

## பனம்பொருள் சாதனை

பனை மரத்தின் மூலப்பொருட்களைக் கொண்டு வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களை ஆக்குவதில் மாதகல் பனம்பொருள் உற்பத்தி நிலையம் அரியசாதனைகளைக்காட்டி முதலிடம் வகிக்கின்றது. பனம் பழத்திலிருந்து இனிமையும், சுவையுமான ஜாமும், குளிர்பானங்களும், ரொவ்வி முதலாம் இனிப்பு வகைகளும், பதனீரிலிருந்து சிறந்த பனங்கட்டியும், பனை ஓலைகள் கொண்டு நெருப்புப் பெட்டிகளும், பனை ஈர்க்கினால் குச்சுகளும் அதிலே உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த நெருப்புப்பெட்டி இன்னும் சில மாதங்களில் விற்பனைக்கு வருமெனத்தெரியவருகிறது.

## சுவீப்பரிசு வீடுகள்

தேசியலொத்தர்சபை இனிமேல் கார்களுக்குப்பதில் புதியவீடுகளைப் பரிசாக வழங்கவிருக்கிறது. இது சம்பந்தமான திட்டம் ஒன்றைச் சபைத்தலைவர் தயாரித்துவருகின்றார். பிரதமரது வேண்டுகோளின் பேரிலேயே இத்திட்டம் தயாரிக்கப்படுகிறது. இதன்மூலம் பல்வேறு தரமான புதியவீடுகள் கட்டிப் பரிசாக வழங்கப்படும். கார்ப்பரிசும், சீலைகள், கைக்கடிகாரப் பரிசுகளும் மக்களின் ஆதரவைப் பெறாததால்சுவீப் டிக்கெற் விற்பனை குறைந்து வருகின்றதாம்.

## கடற்தொழிற் பயிற்சி

வடபகுதிக் கடற்தொழில் பயிற்சி நிலையம் வருகிற புரட்டாசிமாத முடிவிற்குள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இது அத்துணை விரைவில் அமைக்கப்படக் காரணம், யாழ்ப்பாணத்திலுள்ள பழையபெரிய தபாற்கந்தோர்க் கட்டடத்தைத் தபால்மந்திரி கொடுத்துதவியதே. இக்கப்பயிற்சி நிலையம் திறக்கப்படுவதால் யாழ்ப்பாண மீனவர்கள் யாழ்ப்பாணத்திலேயே கடற்தொழில் பயிற்சிபெற வசதியேற்பட்டிருக்கிறது. இதுகாலவரை அவர்கள் நீர்கொழும்பு சென்று பயிற்சி பெற்று வந்தார்கள்.

## பீடிகளின் ஏற்றுமதி

இலங்கையிடமிருந்து மலேஷியா இரண்டு கோடி பீடிகளைவாங்க முன்வந்துள்ளது. ஆரம்பமாக இம்மாத இறுதியிலே பத்துலட்சம் பீடிகள் அங்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றன. இலங்கையிலிருந்து வெளிநாடு ஒன்றுக்குப் பீடிஏற்றுமதி செய்யப்படவிருப்பது இதுவே முதன் முறையாகும். தற்சமையம் இந்தியாவிலிருந்து பீடி இலைகளை அரசாங்கமே இறக்குமதி செய்கின்றது. சிறு கைத்தொழில் மூலம் அரசாங்கமே "ஜனதா பீடி" என்ற பீடிகளை உற்பத்தி செய்கிறது. இந்தப் பீடிகளே மலேஷியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

## ஆங்கிலஆசிரியர்கள்

ஆங்கிலத்தை அரசாங்கம் கட்டாயபாடம் ஆக்கியிருப்பதால் ஆங்கிலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தொகையை அதிகரிக்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இன்று 17,000 ஆங்கில பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், கல்விப்பகுதிப் புள்ளி விபரப்படி 3,000 பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியர்களே இருக்கின்றனர். இத்தொகையை அதிகரிக்கச் செய்யுமுகமாகப் பேராதனை, மிரிகமம், பலாலியாகிய ஆங்கில ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளிலே ஆங்கில பயிற்சிபெற அதிகமான ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவிருக்கின்றார்கள்.

## கடலட்டைஏற்றுமதி

இலங்கைக் கடலட்டைகளுக்கு வெளிநாடுகளிலே அதிகதேவை ஏற்பட்டுள்ளமையால் அவற்றின்விலை அதிகரித்துள்ளது. இவ்வருடத்திலே கனடா, சிங்கப்பூர், இங்கிலாந்து மலேஷியா, சீனு முதலாம் நாடுகளுக்குச் சுமார் ஐந்துலட்சம் ரூபா பெறுமதியான கடலட்டைகளை வடமாகாணக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஏற்றுமதிசெய்து, வெளிநாட்டுச் செலாவணிச் சான்றிதழ் மூலம் இரண்டு லட்சம் ரூபா சம்பாதித்திருக்கிறது.

## நகர் வீடமைப்புத் திட்டம்

குருநகர் வீடமைப்புத் திட்டம்சென்ற 14ஆம் திகதி வீடமைப்பு நிர்மாணத்துறை மந்திரி திரு பீற்றர் கெனமன்ல் ஆரம்பித்துவைக்கப்பட்டது. அவ்வேளை அவர் பேசியபோது, இந்த வீடமைப்புத் திட்டத்திலே 68 வீடுகள் கட்டப்படும்; ஒவ்வொரு வீடும் 7,200 ரூபா செலவில் கட்டப்படும்; இத்திட்டம் பூர்த்தியடைய ஐந்து லட்சம் ரூபா செலவாகும்; இந்த வீடுகள் வீடில்லாதவர்கள், குறைந்த சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்கள், ஏழைகள் ஆகியோருக்கு வாடகைக்கு வழங்கப்படுமெனக் கூறினர். அத்திவாரக் கல்லில் மந்திரி கெனமனின் பெயருடன் யாழ்ப்பாண மாநகர மேயர் திரு. அல்பிறெட் துரையப்பாவின் பெயரும், யாழ்ப்பாண எம். பி. திரு, சி. எக்ஸ் மாட்டீனின் பெயரும் இடம் பெற்றுள்ளன. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அத்திவாரக்கல் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

## மீன்பிடி பயிற்சிக் கல்லூரிகள்

வருடந்தோறும் குறைந்த பட்சம் இரண்டாயிரம் படித்தவாலிபர்களுக்காவது மீன்பிடித்துறையில் பயிற்சியளிக்கும் புதிய திட்டத்தின்படி நான்கு புதிய மீன்பிடி பயிற்சிக்கல்லூரிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இவற்றில் வடமாகாணத்திலே யாழ்ப்பாணத்தில் ஒன்றையும், கிழ்மாகாணத்திலே மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் இரண்டையும் அமைப்பதற்குக் கடற்தொழில் அமைச்சு அங்கீகாரம் அளித்திருக்கின்றது. நான்காவது கல்லூரி தென் மாகாணத்திலே தங்காலையில் அமைக்கப்படும். இந்த நான்கு கல்லூரிகளும் இவ்வருட முடிவிற்குள் ஆரம்பிக்கப்படும்.

## மாணவர்களும் பழைய கடதாசியும்

பாடசாலை மாணவர்கள் தாங்கள் பாவித்த பழைய அப்பியாசப் புத்தகங்கள், வரைதல் கொப்பிகள், சுற்றறிக்கைகள், பரீட்சைத் தாள்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், பாடசாலை அட்டவணைகள், காகிதங்கள், சிட்டைகள் சித்திரத் தாள்கள், கிழிந்த கடதாசித் துண்டுகள், பஸ், றெயில் பழைய டிக்கெற்றுகள் முதலியவைகளைக் கவனமாகச் சேர்ப்பதன்மூலம் தங்கள் நாளாந்த கைச்செலவுக்குப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஏனெனில், கிழக்கிலங்கைக் கடதாசிஆலை கூட்டுத்தாபனம் எவ்வகையான பழைய கடதாசியையும் தொன்ஒன்றுக்கு 25ரூபா முதல் 250ரூபாவரை கொடுக்க முன்வந்துள்ளது. பொது மக்களிடமிருந்து வாங்கும் கடதாசிகளுக்குக்கொடுக்கும் பணத்திலும பார்க்கக் கூடுதலானபணம் மாணவர்கள் கொடுக்கும் பழைய கடதாசிகளுக்குக் கொடுக்கப்படும்.

## வீணேகிடக்கும் காணிகள்

வலிகாமம் கிழக்கு, வலிகாமம் வடக்குக் காரியாதிகள் பிரிவுகளில் சுமார் 500ஏக்கர் காணிகள் விவசாயத்துக்குப் பயன்படக் கூடியனவாயிருந்தும் அவ்வாறு பயன்படுத்தப்படாமல் இருந்துவருகின்றன. இவைகள் தனியார்களால் சொந்தம் பாராட்டப்படுகின்றன. விரைவிலே இவைகள் சுவீகரிக்கப்பட்டு, அவற்றிலே இளைஞர்கள் குடியேற்றப்பட்டு வெங்காயம், மிளகாய், மற்றும் தானிய வகைகள் செய்கைபண்ணப்படவிருக்கின்றன. இவற்றிலே பெரும்பாலான காணிகள் முடிக்குரியனவாம். இதே போன்று யாழ்ப்பாணக்குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் வீணைக்கிடக்கும் காணிகளும் விவசாயத்திற்குப் பயன்படுத்துமாறு சுவீகரிக்கப்படவிருக்கின்றன.

## பத்திரிகைத் தாளின் விலை

உலகசந்தையில் காகிதத் தாளின்விலை அதிகரித்திருப்பதாலும, சுங்கவரித் தீர்வை 5சத வீதத்திலிருந்து 25சத வீதமாக உயர்ந்ததாலும் இலங்கையிலே சென்ற 11ஆம் திகதியிலிருந்து பத்திரிகைக்காகிதத்தாளின் விலை அதிகரித்துள்ளது. 500தாள்களைக் கொண்ட ரேமின் மொத்தவிலை 27ரூபா 55சதத்திலிருந்து 29ரூபா 45சதமாகவும், சில்லறைவிலை 31ரூபா 70 சதத்திலிருந்து 33 ரூபா 85சதமாகவும் அதிகரித்துள்ளன.

## மிளகாய்ச் செய்கை

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே வருகிற 1972-ம் ஆண்டில் மேலும் 1,000 ஏக்கர் காணியில் மிளகாய்ச் செய்கை நடத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதன்மூலம் இங்கே மிளகாய் உற்பத்தி 70,000 அந்தராக உயர்த்தப்படும். இவ்வருட போகத்தின்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் 55,000அந்தர் மிளகாய் செய்கைபண்ணப்பட்டுள்ளது. இம்முறை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் நாடுமுழுவதும் கொள்வனவு செய்த மிளகாயில் 50சத விகிதம் யாழ்ப்பாணத்திலே கொள்வனவு செய்யப்படலாயிற்று.

## மீனுக்கு உத்தரவாத விலை

மீனவர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்க வேண்டும்; அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு மீனுக்குஉத்தரவாத விலைகுறிக்கப்படவிருக்கிறது. அதனால் மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களை அரசாங்கத்துக்குக் குறிப்பிட்டவிலைக்குக் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். மீன்பிடிக் கூட்டுத்தாபனமே உத்தரவாதவிலையைக்கொடுத்து அவர்களிடமிருந்து மீன்களைப் பெற்றுக்கொள்ளும். மீன்கள் மலிந்தகாலத்திலும் உத்தரவாதவிலைக்கே அவைகளை வாங்கும். இதற்கெனக் கரையோரப் பகுதிகளில் பல மீன்கொள்வனவு நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

## தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சத்தியவேத பாதுகாவலன்

# நன்றி மறவாமை

எம் ஆண்டவர் பூவுலகில் வாழ்ந்தபோது அவருக்கு அதிக மனவேதனையைக் கொடுத்தது மக்களின் நன்றியீனம் தான். அவர் போதித்த போது ஆவலுடன் சென்று அவரது சொற்களைச் செவிமடுத்தனர். நோயாளரை குணமடையும்படி அவரிடம் அழைத்து வந்தனர். ஆனால், குணமானவர்களை வீட்டுக்கு அழைத்துச் சென்றபின் குணமாக்கியவரை மறந்து விட்டனர். பத்துக் குஷ்டரோகிகளைக் குணமாக்கியபோது ஆண்டவர் இதை வெளிப்படையாகவே குறிப்பிட்டார்.

யூதாஸ் இடைவிடாது ஆண்டவருடன் இருந்து அவருடைய போதனைகளைக் கேட்டு, புதுமைகளைக் கண்டது மட்டும் அல்ல, அவருடைய விசேஷ நண்பனுக்குரிய அன்பையும் பரிவையும் பெற்றவன். இத்தகையவன் துரோகியாக மாறி தன் தலைவரைக் காட்டிக்கொடுக்கிறான். ஆசாரியரும், பரிசேயரும் அவரை வெளிப்படையாக எதிர்த்தவர்கள். ஆனால், யூதாஸ் அவரது நண்பன். அவரது புதிய திருச்சபையின் தலைவர்களுள் ஒருவன். ஆகவேதான் பரிசேயரின் குரோதத்தைவிட யூதாஸின் துரோகம், நன்றிகெட்டதனம் ஆண்டவரை மிகவும் வருத்தியது.

நாமும் ஆண்டவருடைய நண்பர்களாக, அவரால் விசேஷ விதமாக நேசிக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். வெளிப்படையாகத் தம்மைத் துவேஷிக்கிறவர்களை விட தமது நண்பரென்று கூறிக்கொள்பவரின் நன்றிகெட்டதனம் ஆண்டவருக்கு மிகவும் மனத்துன்பத்தைக் கொடுப்பதால், நாம் அத்தகைய நன்றியீனராக இராமல் எமக்கு அளிக்கப்பட்ட விசேஷ வரங்களுக்கு நன்றியுள்ளவராக இருப்போமாக.

எமது வாழ்வில் எத்தனையோ தடவைகள் நன்றியீனத்துக்கு ஆளாயிருக்கிறோம். அலட்சியமானவர்கள், அல்லது பகைமை பாராட்டுகிறவர்களுக்குக்கூட தொடர்ந்து நன்மைகளைச் செய்யும்படி சிலசமயம் நேரிடுகிறது. எமது உணர்ச்சிகளின் வழிநடவாமல் பிறசிநேகத்துடன் நடப்பது மிகக் கடினமாகவும் இருக்கும். எமக்கு உடனடியான பலன் கிடைக்காததோடு, உதவி பெற்றவர்கள் நன்றி கூடக்காட்டவில்லையென்றால், தொடர்ந்து நன்மை செய்வதென்பது மனித சுபாவத்துக்கு மிகக் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆயினும் தொடர்ந்து அந்நன்மைகளை நாம் செய்யவும் வேண்டும். பகைமை பாராட்டுகிறவர்களோடும் நாம் தொடர்ந்து உறவுகொண்டு கிறிஸ்துவுக்காக அவர்களை நல்லபடியாக நடத்த வேண்டும். இது செய்வதற்கு எமது முழுப் பலத்தையும் பிரயோகிக்க வேண்டியிருக்கும்.

நாமும் இறைவனிடமிருந்து எத்தனையோ நன்மைகளைப் பெற்றிருக்கிறோம். அவற்றுக்காக நாம் நன்றி செலுத்துகிறோமா? நாம் அவரது நண்பர்கள். ஆனால், யூதாஸையோ ஒன்பது குஷ்டரோகிகளையோ போல நாம் நடந்து கொள்கிறோமா? நாம் தவறிப் பாவத்தில் விழுவது அவரது மனதைப் புண்படுத்துவது போலவே நன்றி செலுத்தத் தவறுவதும் அவர் மனத்தைப் புண்படுத்தும்.

இதைக் குறித்து நாம் செய்யக்கூடியது என்ன? முதலாவதாக இறைவனுடைய நன்மைத்தனத்துக்காக அவருக்கு இன்னும் அதிகமாக நன்றி செலுத்தவேண்டும். தனிப்பட்ட விதத்தில் எமக்கு அருளப்பட்ட வரங்களுக்கு மட்டுமன்றி பொதுவான நன்மைகளுக்கும் ஏன், பிறருக்குக் கிடைக்கும் நன்மைகளுக்கும் நன்றி செலுத்தும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இரண்டாவதாக, பிறரது நன்றியீனங்களை பொறுமையோடு சகிக்க மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும். அத்துடன் பிறர் எமக்குச் செய்யும் நன்மைகளுக்கு உண்மையில் நன்றியுள்ளவர்களாய் நடந்து கொள்ளவும் வேண்டும். இவற்றை இறைவனுக்கு ஒப்புக் கொடுப்பதன்மூலம் பிறரது நன்றியீனத்துக்கு ஓரளவில் ஈடுசெய்கிறோம்.

முதலில் உண்மையைத்தான் தேடிக் காண வேண்டும். அப்புறம் அழகும் நலனும் உங்களுக்குத் தானே கிட்டும். கிறீஸ்துநாதர் தம் மலைப் பிரசங்கத்தில் இதைத்தான் போதித்தார். இந்த உண்மையையும் இந்த அழகையும் தான் நான் விரும்புகிறேன். இவற்றிற்காகவே வாழ்கிறேன். இவற்றிற்காகவே சாவேன். மகாத்மா காந்தி.

# சின்னப்பர் என்ன சொன்னார்

## புல்லன் எனக்கும் அல்லவா தோன்றினார் (1கொரி. 15: 8—11)

மறுதலித்த கேபாவுக்குக் காணப்பட்டார், ஓடி ஒழித்த சீடரைச் சந்தித்தார், எதிரி காட்டிய யாகப்பருக்குத் தரிசனையானார், அதிலும் மேலான அதிசயம் தருவது தன்னைத் துன்புறுத்திய எனக்கும் தோன்றினார். தமஸ்குபாதையிலே கொடுத்த காட்சி தரத்திலே குறைந்ததல்ல. கிறிஸ்துவைக் கண்ணுற்றகண்ட முதற்தரமான சாட்சிகளுள் ஒருவனாகத் தன்னையும் கணிக்கிறார் சின்னப்பர்.

அகால பிறவிபோன்ற எனக்கும்; தனது மனந்திரும்புதலைக் குறிப்பிடுகிறார். அது எதிர்பாராத காலந்தவறிய திடீர்ச் சம்பவம். இயற்கைக் கோளாறுபோன்றது. மேலும் சின்னப்பரின் உருவத்தை, பேச்சை, கொள்கையை அவர் எதிரிகள் பரிகாசம் பண்ணினார்கள். இலவச அருளாம், புதுப்பிறவியாம என்கரை பிறவியாச்சே என்று ஏளனம் செய்தனர். அது தனக்குச் சரியாய்ப் பொருந்துமென்று உண்மைக்கும், தாழ்மைக்கும் சாட்சியாகிறார். வயிற்று அழிவு என்று எதிரிகள் பழிமொழி பேசும் என்னையும் இழிவு என்று கிறிஸ்து கழித்துவிடவில்லை என்று களிப்போடு கடவுள் கருணையைப் போற்றுகிறார்.

தனது அப்போஸ்தல உத்தியோகத்தைப்பற்றிப் பெருமையாகப் பேசுவது பவுலில் பழக்கம், (2 கொரி, 11. 5; கலா. 2-11). எனினும் தான் உண்மையாகவே ஒரு புல்லன் என்பதை ஒத்துக்கொள்கிறார். புல் என்ற சொல்லின் பல்பொருள்களில் அல்லவா பவுலின் பெயருக்கு நல்லதொரு வல்ல தமிழ்க் கிளவியைத் தேட வேண்டும். புல்லரைக் கடவுள் எடுத்து வல்லதொரு பொல்லராக்கினார். நான் துன்புறுத்தினேன். எனவே, நான் தூது சொல்லத் தகுதியற்றவன் என்று ஒத்துக் கொள்கிறார். கடவுளின திருச்சபை என்னும் மொழியிலே அவரது ஆழமான வேத அறிவு தெளிவாகிறது. கிறிஸ்து விடுத்த வினா "என்னை ஏன் துன்புறுத்துகிறாய்". அது திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் தனக்கும் கடவுளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையை விளக்கிவிட்டது. எல்லாவித தண்டனைக்கும் துன்பத்துக்கும் தகுதியான தன்னை அப்போஸ்தனாக அழைத்தது பரமனின் பெரிய கருணையேயென்று வியக்கிறார்.

எனவே, கடவுளின் இரக்கமும் வல்லமையும் தன்னிலே செய்த அரிய கிரியைகளை அவர் மறைக்கவில்லை மறுக்கவில்லை, வெளியாக உரைக்கிறார். இறைவனின் அருள் வீணாகவில்லை, அதாவது வெறுமையாயிருக்கவில்லை, நிறைவாயிருந்ததென்று நீங்களே அறிவீர்கள். உழைத்தேன், களைக்குமட்டும், உற்சாகத்தோடு ஒத்துழைத்தேன். மற்ற அனைவரிலும் அதிகமாக என்பது வெறும் புழுகு அல்ல, முழுவாய்மை. மற்றும் சில அப்போஸ்தலர்களின் பணியின் பெயரோடு எழுந்த நூல்களை ஆதித்திருச்சபை ஏறக மறந்துவிட்டது. புனித லூக்காஸ் எழுதிய அப்போஸ்தலர் பணியும், புனித சின்னப்பரின 14 நிருபங்களும் அவருடைய ஊழியத்தை எல்லாருமறிய வசதி தந்தன.

இந்தப் பிரமாதமான சித்தியின் காரணத்தை எடுத்துக் காட்டுகிறார். கடவுளின் அருளே அதைச் செய்தது. இது நிசம். என்னோடு என்று சொல்லும்போது தேவன் நமக்குத்தந்த சுதந்திரமென்னும் விளங்க முடியாத விலையிலாக் கொடையின் மகிமையைக் காட்டுகிறார். இதனால் எங்களை எல்லாச் சிருஷ்டிக்கும் தலையாக வைத்தார். உள்ள யாவுக்கும் கடவுளே அடியும் முடியும, ஆதியும் அந்தமும். கடவுளின் விருப்பை, வைத்த ஒழுங்கை மனிதன் அறிந்து அதை விரும்பி அதன்படி வாழ்ந்தால் இவையெல்லாவற்றையும் தனக்குச் சொந்தமாக்குகிறான்; கடவுளைப்போல ஆசான் ஆகிறான். சுயாதினம் கடவுள் நமது கையிலேதந்த பொல்லாத ஆயுதம். நற்பிரயோகத்தால் நாம் தேவராய் மாறலாம், துர்ப்பாவனையால் நாம் நரகராய்ப் போகலாம். இது ஒரு பயங்கரமான உண்மை, பாக்கியமான உண்மை. மின்னடிபட்டுக் குதிரையில் நின்று மண்ணில் விழுந்து கண்கபோதியான வேளை சின்னப்பர் கற்றபாடமது. மனிதனின் எந்தக் கெட்டித்தனமும் கடவுளின் முன்னால் இன்மை என்பது நிசம், எனினும் அது கடவுளின் செயலோடு ஒன்றிக்கும்போது அவருடைய உண்மையிலே, நன்மையிலே, மாட்சியிலே பங்கு பெறுகிறது.

வேத போதகர் யாவரும் தங்கள் தனிவேலையை யல்ல தேவனின் சொந்த அலுவலையே செய்கிறார்கள். இந்த ஒப்பற்ற நற்செய்தி எல்லாமனிதருக்கும் இறைவன் அனுப்பும் சிறந்த அழைப்பு. எல்லாரும் அறிய வேண்டியது; எனவே, எவரும் அறியக்கூடியது. இந்தப் போதனையிலே பேதங்களோ, வாதங்களோ வர வழியில்லை. அவை தோன்றுகின்றனவே என்றால், அதன் காரணத்தைத் தக்காண நாம் தூரத் தேடித்திரியத் தேவையில்லை, மமதை என்பது மனிதரின் சுயநேசத்தால் ஏற்படும் அறியாமையும் அகந்தையும். இது தன்னையே கடவுளுக்கு எதிராக, அவருக்கு மேலாக மதிக்கும் பேதமை. இதனால் இருப்பவரான கடவுளில் நின்று பிரிகிறான் மனிதன். தன் சகோதரரிலிருந்து பிரிவது அதன் தொடர்ச்சி. ஒரு கிறிஸ்தவன் வாழும்வழி அப்படியல்ல; தேவனின் திருச்சபை அறி

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## பூசை வழிகாட்டி

### ஆவணி — 1971

29. ஞாயிறு — ஆண்டின் 22-ம் ஞாயிறு [ப]
1-ம் வாசகம்: சர்வ. 3: 17—18, 20, 28—29
2-ம் வாசகம்: எபி. 12: 18—19, 22—24
சுவிசேஷம்: லூக். 14: 1, 7—14

30. திங்கள் — நாள் பூசை [ப]
அ. புனித லீமா ரோசா [வெ]
வாசகம்: 1தெச. 4: 13—18
சுவிசேஷம்: லூக். 4: 16—30

31 செவ்வாய் — நாள்பூசை [ப]
வாசகம்: 1தெச. 5: 1—6, 9—11
சுவிசேஷம்: லூக். 4: 31—37

### புரட்டாதி — 1971

1. புதன் — நாள்பூசை [ப]
வாசகம்: கொலோ. 1: 1—8
சுவிசேஷம்: லூக். 4: 38—44

2 வியாழன் — நாள்பூசை [ப]
(அ) புனித முடியப்பர் [வெ]
வாசகம்: கொலோ. 1: 9—14
சுவிசேஷம்: லூக். 5: 1—11

3. வெள்ளி — புனித பத்தாம் பத்திநாதர் [வெ]
வாசகம்: 1தெச. 2: 2—8
சுவிசேஷம்: மத். 16: 13—19

4. சனி — நாள் பூசை [ப]
வாசகம்: கொலோ. 1: 21—23
சுவிசேஷம்: லூக். 6: 1—5

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: "கதலிக்பிறஸ்," யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876.